


விழுப்புரம் மாவட்டம் 2016 வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் விவரங்கள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், காவல்துறை தலைவர் (ஆயுதப்படை) திரு.ஆயுஷ்மணிதிவாரி,இ.கா.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.11.2016) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அருகில் காவல்துறை துணைத் தலைவர் திருமதி.அனிசா ஹீசேன்,இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.நரேந்திரன்நாயர்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.

**2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சீரமைப்பு பணிகள் குறித்து தமிழ்நாடு காவல்துறை தலைவர் திரு.ஆயுஷ் மணி திவாரி, இ.கா.ப., அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட நடவடிக்கைள்**

ந.க.பே.மே/9830/2016 நாள்:11.11.2016

**விழுப்புரம் மாவட்டத்தில் எதிர்வரும் 2016 வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு காவல்துறை தலைவர் திரு.ஆயுஷ் மணி திவாரி, இ.கா.ப., அவர்களின் தலைமையில், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர். இல.சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் 03.11.2016 அன்று முற்பகல் 11.00 மணியளவில் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தின்போது கீழ்க்காணும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

1.தமிழ்நாடு காவல் துறை துணை தலைவர், விழுப்புரம் சரகம்.

2. மாவட்ட காவல் கண்காணிப்பாளர், விழுப்புரம்.

3. மாவட்ட வருவாய் அலுவலர், விழுப்புரம்.

4. சார் ஆட்சியர், திண்டிவனம்.

5. உதவி ஆட்சியர் (பயிற்சி), விழுப்புரம்.

6. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), விழுப்புரம்.

7. வருவாய் கோட்டாட்சியர்கள், விழுப்புரம், திருக்கோயிலூர் மற்றும் கள்ளக்குறிச்சி.

8. அனைத்து காவல் துணை கண்காணிப்பாளர்கள், விழுப்புரம் மாவட்டம்.

9. மாவட்ட தீயணைப்பு அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, விழுப்புரம்.

10. உதவி செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித் துறை, விழுப்புரம்.

11. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், விழுப்புரம்/ கள்ளக்குறிச்சி உபகோட்டம்.

12. உதவி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, விழுப்புரம்.

13. வட்டார போக்குவரத்து அலுவலர், விழுப்புரம்.
14. உதவி இயக்குநர், மீன்வளத் துறை, விழுப்புரம்.
15. உதவி பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம் பிரிவு 1 & 2.

2016 வடகிழக்கு பருவமழையின் போது ஏற்படக்கூடிய புயல்/மழை/வெள்ளம் ஆகியவற்றின் தாக்கத்தினால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுடன் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

**கட்டுப்பாட்டு அறை:**

விழுப்புரம் மாவட்டத்தில், 2016 வடகிழக்கு பருவமழை பேரிடர் காலங்களில் பொதுமக்கள் தொடர்பு கொள்ளுவதற்கு ஏதுவாக, பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டு, அதில் 24X7 சுழற்சி முறையில் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பு கொள்வதற்காக கட்டணமில்லா தொலைபேசி எண்.1077 இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**மழையின் அளவு:**

கடந்த 2015 ஆம் ஆண்டு பெய்த வடகிழக்கு பருவமழையின் அளவு சராசரி அளவு 638.11-ஐ விட 298.2 மி.மீ அதிகமாக பெய்து, அதாவது 936.38 மி.மீ. அளவு அதிகமாக பெய்தது. இந்த வருடம் 2016-ல் இதுவரை பெய்த பருவமழையின் அளவு 90.2 மி.மீ. என தெரிவிக்கப்பட்டது.

**ஆய்வுக்கூட்டங்கள்**

2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து 16.08.2016 முதல் மாவட்ட அளவில் பல்வேறு ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

## விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் பேரிடர் காலங்களில் எவ்வாறு பாதுகாப்பாக, மீட்பு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என விழிப்புணர்வு செயல்பாடுகள் செய்து காட்டப்பட்டுள்ளன. மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன், தீயணைப்பு மீட்புக்குழுவினர் மற்றும் மருத்துவ துறையினருடன் இணைந்து செயல்முறை விளக்கங்கள் (Mockdrills) நடத்தப்பட்டது. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுடன் செஞ்சிலுவை சங்கத்தினருடன் இணைந்து விழிப்புணர்வு பேரணிகள், போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

- 2015 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினால், விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகளை கணக்கில் கொண்டு, அதன் அடிப்படையில் 166 கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளாக (Vulnerable Areas) தேர்வு செய்யப்பட்டுள்ளன.
    - அதிகம் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள்(Highly Vulnerable) - 4 கிராமங்கள்
    - பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் (Vulnerable)- 13 கிராமங்கள்
    - மிதமாக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் (Moderately Vulnerable) - 26 கிராமங்கள்
    - குறைந்தளவு பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் (Low Vulnerable) - 123 கிராமங்கள்
- வடகிழக்கு பருவமழையின்போது, ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து பொதுமக்களை மீட்க, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களிலிருந்து மீட்புக்குழுக்கள், உள்ளூர் முதன்மை பொறுப்பாளர்கள் தேர்வு செய்து, கீழ்க்கண்ட குழுக்களாக பிரிக்கப்பட்டு, அனைத்து சம்பந்தப்பட்ட துறைசார்ந்த மண்டல குழுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.
    - முன்னெச்சரிக்கை குழு (Early Warning Team)
    - கண்டறிதல் மற்றும் மீட்பு குழு (Search and Rescue Team)
    - பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேற்றும் குழு (Evacuation Team)

- ❖ புயல்பாதுகாப்பு மைய மேலாண்மை குழு (Shelter Management Team)
- ❖ முதலுதவி மற்றும் அவசர சிகிச்சை குழு (First Aid Team)
- ❖ பத்திரிக்கை மேலாண்மை குழு (Media Team)
- ❖ கண்காணிப்பு குழு (Patrolling Team)
- ❖ போக்குவரத்து மேலாண்மை குழு (Transport Management Team)
- ❖ வெள்ளத்தடுப்பு மற்றும் நிவாரணக் குழு (Flood Patrolling and Relief Team)
- ❖ நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றும் குழு (Waterways Management and Eviction of Encroachment Team)

- ➢ 2016 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 13 வட்டங்களுக்கும், வட்டவாரியாக துணை ஆட்சியர் தலைமையில் 13 கண்காணிப்பு குழு அலுவலர்கள் (Nodal Officer) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி ஒவ்வொரு கண்காணிப்பு குழுக்கள் தலைமையின்கீழ் சம்பந்தப்பட்ட அனைத்து துறை சார்ந்த அலுவலர்களைக் கொண்டு 46 எண்ணிக்கையில் குழுக்கள் நியமனம் செய்யப்பட்டு, அனைத்து மண்டல குழுக்களிலும் மொத்தம் 542 உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.
- ➢ மேற்படி ஒருங்கிணைந்த துறைகளின் குழுக்கள் ஒவ்வொரு குறுவட்டம்/ வட்டாரம் வாரியாக நியமிக்கப்பட்டுள்ளதால், கடந்த ஆண்டு பாதிப்புக்குள்ளான கிராமங்களை மண்டல அளவிலான குழுக்கள் நேரில் ஆய்வு செய்து பணிகள் குறித்த அறிக்கையினை புகைப்படத்துடன் சமர்ப்பித்தனர். அதன் அடிப்படையில் நீர்வரத்து வாய்க்கால்களை தூர்வாரி ஆழப்படுத்துதல், சிறுபாலங்களின் அடைப்புகள் அகற்றுதல், துணை வாய்க்கால்களை அகலப்படுத்தி ஆழப்படுத்துதல், மூடப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளை மறுசீரமைத்தல், நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றுதல் உள்ளிட்ட பணிகளை சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான அறிக்கையினை புகைப்பட ஆதாரங்களுடன் சமர்ப்பித்துள்ளனர்.

**முதன்மை பொறுப்பாளர்கள்: (First Responders- Identified Swimmers and Climbers in Vulnerable Areas)**

வடகிழக்கு பருவமழையின்போது மீட்பு பணிகளுக்காக, அந்தந்த வட்டங்களில் 830 நபர்களை முதன்மை பொறுப்பாளர்களாக தேர்வு செய்து, அவர்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

- முதன்மை பொறுப்பாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கிட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- முதன்மை பொறுப்பாளர்களுக்கு மீட்பு பணி மற்றும் முதலுதவி சிகிச்சை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- மேலும், முதன்மை பொறுப்பாளர்கள் நீச்சல் மற்றும் மரம் ஏறுபவர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அனைவரும் காவல்துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கிராம அளவிலான விழித்திரு குழு (Village Level Vigilance Committee)**

- ஒவ்வொரு கிராம அளவிலும் கிராம நிர்வாக அலுவலர், பஞ்சாயத்து தலைவர் மற்றும் சமூகம் சார்ந்த நபர்கள் உள்ளிட்ட Village Vigilance Committee அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவினர், பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளின் நிலவரத்தினை அவ்வப்போது கண்காணித்து உடனுக்குடன் உயர் அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட மண்டல குழுவினருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**தனியார் மருத்துவமனை முன்னேற்பாடுகள்**

- உள்நோயாளிகள் உள்ள கட்டிடத்தில் மின்இணைப்பு துண்டிப்பு ஏற்படும் நேரங்களில் மாற்று ஏற்பாடுகள் (Generator - in Elivated based) செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- தரைதளத்தில் மழைநீர் புகும் நேரங்களில் தரைதளத்தில் உள்ள நோயாளிகளை உடனடியாக மீட்டு மேல்தளத்திற்கு மாற்றிட உரிய முன் ஏற்பாடுகள் செய்து தயார் நிலையில் வைத்திட வேண்டும்.

- புயல்/மழை/வெள்ளம் ஏற்படும் அவசர காலங்களில் தனியார் மருத்துவமனைகள் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான அவசர சிகிச்சை உதவிகளை உடனடியாக அளித்திட வேண்டும்.
- மழைக்காலங்களில் மருந்து கழிவுகள் நீரோட்டம் உள்ள இடத்தில் கொட்டப்படக் கூடாது. உரிய பாதுகாப்பு வழிமுறைகளுடன் வெளியேற்றிடல் வேண்டும்.
- மேலும், மழைக்காலங்களில் தினமும் 10 நிமிடங்கள் ஜெனரேட்டர் இயக்கி சோதனை செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டது.
- இந்திய மருத்துவ சங்க கிளைகள் வாரியாக மருத்துவமனைகள் குறித்த விவரம், மருத்துவர்களின் விவரங்கள் (கைபேசி எண் மற்றும் இ-மெயில் விவரத்துடன்) பட்டியல் பெறப்பட்டு விழுப்புரம் மாவட்ட இணையதளத்தில் (www.Viluppuram.nic.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- மேலும், மழைக்காலங்களில் டெங்கு கொசு அதிகம் பரவ வாய்ப்புள்ளதால், மருத்துவமனையில் போதிய விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது.

**வனத்துறையின் முன்னேற்பாடுகள்**

- பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் குழுவில் மாவட்ட வன அலுவலர் ஒருங்கிணைக்கப்பட்டு, வனச்சரக அலுவலர்கள் அனைத்து கோட்ட மற்றும் உட்கோட்ட மண்டல குழுக்களுடன் ஒருங்கிணைணக்கப்பட்டுள்ளனர்.
- மழை வெள்ளக்காலங்களில் வெளிவரும் பாம்புகள் மற்றும் விஷ பூச்சிகளை பிடிக்க விழுப்புரம் மாவட்டத்தில் 20 பாம்பு பிடிப்பவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

**காவல் துறை:**

- 166 Vulnerable பகுதிகள் மற்றும் கடலோர குடியிருப்புகள் அடங்கிய பகுதிகளில் Green Corridor உருவாக்க காவல் துறையினரால் Deployment Plan மற்றும் Traffic Plan தயார் செய்யப்பட்டு அவற்றில் உள்ள அலுவலர்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து காவல் நிலையங்களிலும் தொடர்பு சாதனங்கள் தயார் நிலையில் உள்ளன எனவும், சுழற்சி பணியில் காவலர்கள் கட்டுப்பாட்டு அறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

- மேலும், பேரிடர் காலங்களில் சட்டம் மற்றும் ஒழுங்கினை பாதுகாத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அனைத்து VHF/HF Set களும் உபயோகத்தில் உள்ளன.
- SDRF மூலமாக பயிற்சி பெற்ற 60 காவலர்கள் உள்ளனர்.

**<u>தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் குழு:</u>**

- வானூர், விழுப்புரம், திண்டிவனம் ஆகிய வட்டங்களில அதிக அளவில் Vulnerable பகுதிகள் உள்ளதால், இவ்வட்டங்களில் முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொண்டு, மீட்பு பணிகளுக்கான போதிய உபகரணங்களான Inflatable Rubber Boats, Life Boats, Life Buoys, Life Jackets and Rubber dinghies தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.
- மேற்படி பாதிக்கக்கூடிய பகுதிகளில் மீட்பு பணிகள் குறித்து செயல்முறை விளக்கங்கள் (Mock Drills) நடத்தப்பட்டுள்ளது.
- நன்கு நீச்சல் தெரிந்த மீனவர்கள் 10 நபர்களை விசைப்படகுகளுடன் தெரிவு செய்து, அவர்களை தீயணைப்பு மற்றும் மீட்பு குழுவினருடன் மீட்பு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**<u>பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்)</u>**

- அனைத்து கோட்ட அலுவலர்கள், தங்களது எல்லைக்குட்பட்ட புயல் பாதுகாப்பு மையங்கள், பள்ளிகட்டிடங்கள், சமுதாய கூடங்கள் மற்றும் கல்யாண மண்டபங்கள் உள்ளிட்ட கட்டிடங்களை ஆய்வு செய்து, பேரிடர் காலங்களில் பொதுமக்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கட்டிங்களில் குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதி ஆகியவை தணிக்கை செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.

**<u>பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு)</u>**

- விழுப்புரம் மாவட்டம், அனைத்து வட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், ஆறுகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலை புறம்போக்குகளையும் தூர்வாரி அகலப்படுத்தி ஆழப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஏரிகளின் கரைகளை பலப்படுத்தியும், போதிய மணல்மூட்டைகள் இருப்பிலும் வைக்கப்பட்டுள்ளது.

- கடந்த 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை/வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு, பழுதடைந்த நிலையில் அணைக்கட்டுகள், மதகுகள், கலங்கங்கள், கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலைத் துறை

- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாலங்கள் மற்றும் சிறுபாலங்கள் ஆய்வு செய்து, பழுதடைந்த நிலையில் இருந்த பாலங்கள் சீரமைக்கப்பட்டும், மழைநீர் ஓடுவதற்கு ஏதுவாக அடைப்புகள் நீக்கப்பட்டும், தரைப்பாலங்களின் கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.
- நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் மழைநீர் தேங்கா வண்ணம் சாலைகள் மேம்படுத்தப்பட்டும், பழுதடைந்த நிலையில் இருந்த சாலைகள் சீரமைக்கப்பட்டு உள்ளது.
- பேரிடர் காலங்களில் தேவைப்படும் உபகரணங்களான Buldozers, JCBs, Power saw Tree cutting equipments உள்ளிட்டவை தயார் நிலையில் உள்ளது. மேலும், மழை வெள்ள காலங்களில் விழும் மரங்கள் மற்றும் மின்கம்பங்களை உடனுக்குடன் அகற்றிடும் பணிக்காக போதிய பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ளனர். மேலும், அவசர காலங்களில் சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிக்கும் பணிகள் மற்றும் போக்குவரத்து சீரமைப்பு பணிகளுக்காக தனியார் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ளனர்.
- மேலும், வெள்ளப்பெருக்கினால் பழுதடையும் பாலத்தின் இடதுபுறத்தில் மாற்றுவழிச் சாலை அமைக்கப்பட்டு, அதன் பக்கவாட்டு கரைகளில் மணல் மூட்டைகளை அடுக்கி பலப்படுத்தப்பட்டு உள்ளது. மேலும், பொதுமக்களின் பாதுகாப்பிற்காக சாலையின் இருபுறங்களிலும் சிவப்பு நாடாவினால் கட்டப்பட்டு, தடுப்பு அரண் (Barricade) போடப்பட்டுள்ளது. மேலும், மாற்றுவழி சாலையினை குறிப்பிடும் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது. அனைத்து பாதுகாப்பு உபகரணங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

**<u>ஊரக வளர்ச்சித் துறை</u>**

- அனைத்து வட்டாரங்களிலும் உள்ள அணைக்கட்டுகளில் உள்ள உடைப்புகள் மற்றும் பலவீனமடைந்த நிலையில் உள்ள மதகுகள் சீரமைக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பழுதடைந்த செயல்படாத நிலையில் உள்ள ஆழ்துறை கிணறுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. மேலும், பேரிடர் காலங்களில் ஏற்படக்கூடிய மதகுகள் உடைப்பினை தடுக்க போதிய அளவில் மணல் மூட்டைகள் இருப்பில் உள்ளது. மேலும், பஞ்சாயத்து சாலைகளில் விழும் மரங்களை உடனுக்குடன் அகற்றி, சாலை போக்குவரத்தினை சீரமைத்திட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தயார் நிலையில் உள்ளது.
- மேலும், பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைப்பதற்கு போதிய அளவு பொது கட்டிடங்கள், சமுதாய கூடங்கள் மற்றும் கல்யாண மண்டபங்களின் விவரப்பட்டியல் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

**<u>குடிமைப்பொருள் ஏற்பாடுகள்:</u>**

- பேரிடர் காலங்களில் தேவைப்படும் அத்தியாவசிய குடிமைப்பொருட்கள் போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி குடிமைப்பொருள்கள் எடுத்துச்செல்ல போக்குவரத்து லாரிகள் மற்றும் ஓட்டுநர்களின் விவரப்பட்டியல் தயார் நிலையில் உள்ளது. மேற்படி பணிகளை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் மற்றும் கூட்டுறவுத் துறை இணை பதிவாளர் ஆகியோர் கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**<u>மருத்துவத் துறை:</u>**

பேரிடர் காலங்களில் தேவைப்படும் அனைத்து மருந்துகளும் போதிய அளவு இருப்பில் உள்ளன.

**<u>கால்நடை பராமரிப்புத் துறை:</u>**

- பேரிடர் காலங்களில் கால்நடைகளுக்கு தேவையான அவசர அத்தியாவசிய மருந்துகள் போதுமான அளவில் அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் இருப்பில் வைக்கப்பட்டு, மருத்துவர்கள் போதுமான அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனர்.

**<u>மின்சார வாரியம்:</u>**

- பழுதடைந்த நிலையில் இருந்த அனைத்து மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகள் மாற்றப்பட்டுள்ளது எனவும், மின்கம்பங்கள் அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளான முட்புதர்கள், மரங்கள் உள்ளிட்டவைகள் அகற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. விழுப்புரம் மின்பகிர்மான வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில், மின்தடை மற்றும் விபத்துக்கள் ஏற்படாவண்ணம் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்கண்ட பணிகள் செய்யப்பட்டுள்ளது.

1) தொய்வான மின்கம்பிகள் சரிசெய்யப்பட்டது.
2) மரக்கிளைகள் மற்றும் மர ்கள் மின்கம்பிகளில் இடையூறாக இல்லாத நிலையில் பணி மேற்கொள்ளப்பட்டது.
3) பழுதுதடைந்த மின்கம்ப ்கள் அடையாளம் கண்டு மாற்றப்பட்டது.
4) தொய்வான மின்கம்பிகளுக்கு இடையில் புதிதாக மின்கம்பம் நிறுவப்பட்டது.
5) சாய்ந்த நிலையில் உள்ள மின்கம்ப ்கள் சரி செய்யப்பட்டது.
6) நீண்ட காலத்திற்கு முன் அமைக்கப்பட்ட மின்கம்பிகள் மாற்றம் செய்யப்பட்டது.
7) இழுவைக் கம்பிகள் சரிசெய்யப்பட்டு மின்கம்ப ்கள் சாயாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
8) முன்னெச்சரிக்கை தொடர்பாக, அத்தியாவசிய தளவாட சாமான்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
9) விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்ட வாகனங்கள் தயார்நிலையில் உள்ளது.
10) விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தில் மின்விபத்து தவிர்ப்பு சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. பொது மின்தடை – மின் விபத்து குறித்த தகவல்களை தெரிவிக்க சேவை மையத்தின்

அலைபேசி எண்.9445855719 என்று பொது மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

bgh J

- வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் காவல் துணை கண்காணிப்பாளர்கள் தங்களது மண்டல குழுவினருடன் இணைந்து பாதிக்கக்கூடிய பகுதிகளை ஆய்வு செய்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.
- பேரிடர் மேலாண்மை குறித்து அனைத்து **Vulnerable** பகுதிகளிலும் **Mock drill** மற்றும் விழிப்புணர்வு செயல்பாடுகள் நடத்திட அறிவுறுத்தப்பட்டது.
- பேரிடர் காலங்களில் ஏற்படக்கூடிய பாதிப்பின்போது சட்டம் மற்றும் ஒழுங்கினை பராமரித்திட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.
- போக்குவரத்து இடையூறு ஏற்படாத வண்ணம் போதிய முன்னேற்பாடுகள் செய்திட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.
- மழை / வெள்ளம் பாதிப்புகளினால் எவ்வித உயிர் சேதமும், பொருட்சேதமும், கால்நடை சேதமும் ஏற்படாத வண்ணம் தகுந்த முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, எவ்வித சேதமும் ஏற்படாத வண்ணம் கண்காணித்திட சம்மந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

ஓம்.இல.சுப்பிரமணியன்,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
விழுப்புரம்.

பெறுநர்
தமிழ்நாடு காவல் துறை தலைவர்,
தமிழ்நாடு காவல் துறை ஆணையம்,
சென்னை.
நகல்: சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.
நகல்: மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக எழுத்தர்/
மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நேர்முக எழுத்தர்